உ

சிவமயம்.

புரசை

# ஸ்ரீ கங்காதரீசர்

## வண்ணம்,

---

ஷெகிராமம்-மிராசிதார்-ஆதியப்பமுதலியாரும்
பேரூர்நாட்டுக்கிராமத்தாரும்
நேமம்கிராமத்தாரும் ஆகிய
இவர்கள்பேரில்

## சீட்டுக்கவிதைகள்.

---

கூவம் - சோடச அவதானம்
**சாமிநாதமுதலியாரவர்க
ளியற்றியவை.**

---

இவற்றை
ஷெ. ஆதியப்பமுதலியார் - பௌத்திரர்
**பு-முருகப்பமுதலியாரும்**
வி - தாண்டவராயமுதலியார் - குமாரர்
**இரத்தினசபாபதிமுதலியாரும்**
உதவிசெய்யப்
புரசை-அஷ்டாவதாநம்
**சபாபதிமுதலியார்**
முன்னிலையிற்பரிசோதித்து

ஷெ நேமம்-மிராசிதார்-சீயால்முதலியார்
புங்கத்தூர்-ம. சபாபதிமுதலியாரது
கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்
பதிப்பித்தனர்.

---

ஆங்கிரச௵ புரட்டாசிமீ
௲அ௱எ௰உ௵ செப்டம்பர்மீ.

உ

முருகன் துணை.

புரசை

ஸ்ரீ பங்கஜாக்ஷியம்மை சமேத

# கங்காதரீச்சர்

## வண்ணம்.

---

தனதன-தந்தன-தான-தனா-தனா-தனா-தனா-தன
தனதன-தந்தன-தான-தனா-தனா-தனா-தனா-தன
தந்தனந்-தனனதன-தந்தனந்-தனனதன
தனத்தாத்-தனனதன
தானா-தனனதன-தானா-தனனதன-தானா-தனனதன-தந்தானதான
தந்தனத்த-தனதனன-தானனா.

திருமகளுஞ்சசிவாணிவி-ண்டு-மாதர்-வேத-மாதவ
முனிவரெண்டிசையோரும்அ-மோக-நாக-ரீக-மாகவே
சந்திரன்பரிதிமல-ருஞ்சொரிந்திதயமகிழ்-வுறப்போற்றியுயர்சதி
நீதா-சர்வபுவன-மாதா-வெனவுதித-மேதா-டுதிபுரிய-லங்காரிநீல
மரகதகுங்குமமேனிமெய்-ஞான-மோன-மான-மாநிதி
பரமசவுந்தரியாமயி-ராமி-வாமி-காமி-மாமலர்
கொந்தடர்ந்தவெழிலிதி-ரண்டெழுந்தகுழலிமெ
யருட்பூத்திலகுகொடி-நாகாபரணிசிவ-மாகாரணிபுதிய-பாகார்மொழியுசித-சிங்கா
திரிபுரசுந்தரிவீரிய-கோரி-நாரி-சூரி-நாரணி [ரரூபி
டமருகமுந்திரிசூலக-பாலி-நீலி-பால-லோசன
மங்கைசங்கரிவரதர்-தங்கையம்பிகைகவுரி-யிருட்கூட்டமெனவெதிர்
வாதாடிவருமகி-ஷாசுரனையும்வெகு-போராடியுடல்கிழி-சங்கராதேவி
பங்கயக்கணுமைமருவு. பாகனூர்

## கொச்சகக்கலிப்பா.

காலநலமன்னும்வின்னுங் காராகியாதார ................ *
மூலமுதலாறினுறை மூர்த்தியுமாய்ப்பூர்த்திகொண்டப் ......... *
பாலகண்டசுத்தவெளி பத்திச்செழுஞ்சுடர்போல் ............... *
தாலவொளியாகிநின்ற தற்பரமுமானவரோ.................. (ஹ)

திரிபுவனங்களிலையுள-பேர-நேக-போக-யோகிக
ளரியயனிந்திரனார்முனிவோர்வி-ணோரொ-லோரு-நாடொறும்
வந்துநின்றடிபணிய-வும்பதஞ்சலிதொழவெ-திமித்தாத்தைதிரிதிகட
தாதாகிமிதிமியன-வேதாளமொலியொடு-பாதாளமுமதிர-ஒன்றுனதாளில்
நடனபொனம்பலராஜசர்-வேச-நேச-யார்ச-பாபதி
சிவசிவசங்கரனார்கயி-லாச-வாச-மாசி-லாதசம்
பந்தரங்குனைசெயவி-ரிந்தசெந்தமிழறிஞர்-திருக்கூட்டமதுவர
ஆர்வாழ்மிழலையினி-னோடோறுநிதிதனி-லோர்காசருள்புரியு-மன்பானதியாகர்
தெளிவுளசுந்தரர்தூதுவி-நோத-பாத-வேத-நாயகர்
அரகரசம்புசதாசிவ-பூத-நாதர்-நாத-கீதமி
குந்தபைந்தமிழ்வரிசை-செங்கனும்பொன்னெனவரு-மகத்தாய்ப்புகழ்பரவு
கோவானவரதிக-தேவானவரழகு-கோகேதனமுடைய-பண்பானநாதர்
பங்குடற்குளரியுமொருபாலராம்

## கொச்சகக்கலிப்பா.

ஆதியப்பனும்மறையோ னாதியப்பனென்றுதொழு............ *
ஊதியப்பனாற்பதிக மோதியப்பரும்பணியும்................ *
சோதியப்பனாகத் துலங்குமப்பனேகமதி .................... *
பாதியப்புடன்புனைந்தோர் பார்தகப்பனானவரோ.............. *

பரசுடன்ஒண்டிரிசூலக-பால-நீள்பி-னாக-மாமழு
வனிதிரியம்பகர்கூவிள-மார்பர்-நாகம்-வாழ்ப கிரதி
யுங்கரந்தையறுகல்-கொன்றைதும்பைபலபல-மலர்ப்பூத்தொடையதிக
சேடரமதியொடு சூடரமதுபெறு-கோடரவருலக-முந்தேருபாவை
மதியுறுமந்திரசாரதி-போத-னானு வேத-வாசிகள்
வடவரையுஞ்சிலைநாணுயர்-சேடர்-மாயர் பாண-மாய்வர
மண்டலங்களிலுயிரும்-விண்டலங்களிலுமுயி-ரினைக்காக்கமுனிவர்கள்
மேல்வானவர்கள்பல செனபதியெனவெ-தேரேறியுநகைபி-ரிந்தாதியான

பலபுரம்வென்றவில்மாரன-ரூப-மாக-வேசெய்-தோரணி
யடிமுடிபங்கயன்மாலறி-யாத-சோதி-யாதி-மூவர்சொல்
வந்தனைந்தமிழ்நிறைத-லங்களெங்கணுமிகவே- துதித்தேத்துமடியவர்
நாவேறுவர்கரிய-சேவேறுவரவர-லால்வேறிலையெனவர்-கொண்டாடுதேவர்
அங்கதித்தகிரியனுபதேசனார்.

கொச்சகக்கலிப்பா.

நாதவிந்துவாயகண்ட ஞாலமெங்குமேநிறைந்த ................ *
ஆதியந்தமாய்விளங்கி யாளவந்தஞானசம்பு ................ *
கோதகன்றுமேபணிந்து கூறன்புமீறுதொண்டர் ............ *
மீதிலன்புதான்மிகுந்து வீடுதந்ததேவவோ ................ (வரு)

பனசமரம்பையுமாவொடு-பூக-நாளி-கேர-மாதுளை
நிறைவனமெங்கணுமேவிளை-யாடி-யோடி-யேறி-யூகமு
நந்தமுஞ்சிலகனிக-டின்றுகொண்டதுமுகிய -வனத்தோப்பிலுதிர்கனி
தானேயுடனிறைகள்-பாலாறொடுபெருகி-மேலாகியகழனி-யும்பாயவீறு
பயிர்களெழுந்துவிணுடள-வாய-ளாவி-மேவி-யேவரி
காளமதுஞ்சொரிவானவெ-ளாண்மை-ராசி-மேரு-வாமென
வுங்குவித்தநுதினம்வி-ளைந்தபொங்கமுடனுயர்-புழற்கோட்டமெழிலெழு
மூர்நாடுமுளநகர்-தேவாலயமடமு- நீள்வேதியராசர்-சங்கீதவாணர்
பலபலமண்டபமேனிறை-மாட-கூட-மேடை-யீசுரன்
அமுதுநுகர்ந்திடவேமுளை-வாரி-நீடி-வாழி-பாடிய
கந்தர்கம்பர்தமிழ்பகர்-தொண்டைமண்டலமதனில்-மிகக்கீர்த்திபரவிய
வேளாளர்கடெருவு-தேர்வீதிகள்மருவு-வாழ்வாபுரசைவளர்-கெங்காதரீசர்
அண்டமெட்டும்வடவணையில்வாழ்மினாள்.

கொச்சகக்கலிப்பா.

மானோமயிலோ மடவனமோகோகிலமோ ...................... *
தேனோவமுதோ தெவிட்டாத்திரவியமோ ...................... *
யானோவறியே னபுரூபசித்திரவல்லி ........................... *
தானோகண்காட்சிதனைச் சாற்றுவன்கேள்காதலனே ......... (௨)

மருவுல்வுங்கமலாலய-வேத-னார-நேக-நாள்பர
சிவனைநினைந்தொருதாளினி-லூசி-மீதி-லேமு-கர்த
வம்புரிந்துலகதனி-லெங்கிருந்தவழகுக-ளினைச்சேர்த்தருமைபெற
வேயோர்பதுமையென-வேதானுருவுசெய்த-ரூபாகரல்டிவி-வண்டாடுவாச

மலர்செருகுங்குழலிசனை யேதோ-ழாத-பேருள்-யாமமொ
சிறுபிறைவெண்டிருநீறெடு-கூடு-ஞாய-மோசால்- வாணுதல்
திங்கள்பங்கயமோமுக-மந்தமென்புருவமத-சிலைக்கொக்குமிருவிழி
வேலோவிடமோகணை-வாளோபிணையோசடல் - மீனோநிம்ரேகுழை - யுஞ்சேர்
[பொனூசல்

வருசிமிழ்செண்டிளநீரொடு-தாள-மோகி-ரீட-மோவிரு
மலைகடிரண்டனவோகுட-மோபொன்-மேருவோ-பயோதர
முங்கனங்கடமிலிடை-யெங்ககன்றதெனசொல்வ-னதைப்பார்க்கிலதிசயம்
வேள்கோயிலுமரவ-மோமானடியோசுனை-யோவாசனையோதொடை - யின்சோடு
மங்கைபொற்பதவ்வனசமாகுமே. [வாழை

கொச்சகக்கலிப்பா.

மங்கையர்க்கெலாமரசி வங்கணத்திலேசரசி...................... *
எங்கிருக்குநாயகமோ வெண்கணுக்குண்மாமணியாங்............*
குங்குமப்பூமேனிபசுங் கொம்பையொக்கும்வாய்பவளம்...... *
பொங்கமெப்படிப்பகர்வேன் புந்திபித்தமீறுதலோ...... (௨)

மகபதிதனபதியோபணி-லோக-மோகண்-வீசு-சாடையி
லுலகமடந்தையுமான-பெணே கணே-பொனே-மினேதனி
வந்ததெங்கொலுனைவெயி-லின்கொடுந்தகையிதுவ-லிளைப்பாற்றவும்விசிற
வோபூவடிவருட-வோதானலதொருகை-லாகேதருவனெசொ - லஞ்சாதேதேனே
எனசபலங்கபடே-துத-காதெல்-மதி-லேத-யாளம்வை
யரியதவஞ்செய்ததாலடி-யே னும்-யோக-சாலி-யாயின
னின்பெருந்தகைவடிவு-கண்டுகண்குளிரநிம-லனைப்பார்த்ததரிசன
மானேவிழிவலையு-ளானேனதிவிரக-னேனபரவசமி-குந்தேனெயாரி
மறுவசனஞ்சொலவெகு-மோக-மீறு-தேயி-தேதுன
திதயமதுங்கலபழி-காரி-பாத-கீக-டூரியி
ரங்குநெஞ்சடிமைமுறி-தொண்டனென்றுறுவனல-துனக்கேற்றபரவச
நீகேளல்குலரவ-வாயேகையிடுகுவ-னேனபிரிவதில்லை-சந்தேகமாகில்
வண்குயக்கிரியிலேனைவைகோதையே.

கொச்சகக்கலிப்பா.

என்றுசிலபந்தயமி யம்பியவடன்கணெதிர்...................... *
நின்றுகரமுந்தொடநெ ளிந்த்சிரமுங்குலுக்கிக்...................*
குன்றனையகொங்கையைக்கு ளிர்ந்தவிழிகொண்டவகை......... *
நன்றெனவிருந்திதனை நயந்தனளிசைந்தனளே ... ......... (௩)

விரியலர்பந்தலுள்நீளணை-யான-பாயல்-மீது-வாசனை
பரிமளகெந்தபடீர-வாது-பூசு-வாளு-லாசமு

டங்குகந்தமலர்சிறு-செண்பகம்புனைவள்குறு-நகைப்பாற்சிலகருள்தன்
வாயர்லருள்வளதி-லேபாதியுதவுவள்-சீரானபயிரவி-புங்காபிதோடி
பலவிதமும்பதிலுறவ-தானி-யார்சொல்-பாட-லோதுவள்
சரசவிதம்புரிவாள்முலை-மீதி-லேணை-போட-நாணுவள்
அம்பலந்தருவளித-மூண்டுகொஞ்சுவளுமது-மனக்கூச்சம்விடுமென
மேமேலவிழுவள்மய-லாமேலகுள்ளிமத-னுமேலபதறுவ-ளடங்காதமோக
வெறியொடுகெஞ்சுவள்தாமத-மேது-சாமி-மோடி-யோவென
வுடைகளுரிந்துமலாடிவி-நோத-மான-லீலை-தேடியும்
அந்தரங்கமதனிலு-கந்துகந்துடலமது-மயிர்க்கூச்சிடுநுதமி
நானூறுவகைசெய-லேநூறுவன்சயொடு-தேனூறுமதமனுகந்தேமின்னும்
இங்கிதத்திலவளுபரிமேலதாய்.

கொச்சகக்கலிப்பா.

கெட்டிகெட்டிநல்ல் கிரீடிமதனூர்தொழிலில் .................. *
அட்டியட்டிசெய்வதென்ன ஆண்பிள்ளைதிராணியிதோ.......... *
தட்டிதட்டிவந்தமதன் தானேடைச்சண்டைசெயும் ..... ........ *
திட்டமிதேகட்டழகி செய்வனெனத்தேர்ந்தனளே...... (௫)

விளைகமழ்ந்குமவாடைக-மாக-மாக-மாக-மாவென
பரிபுரகிங்கிணிேயாசைக-லீர்க-லீர்க-லீர்க-லீரென
வுங்கைதந்குவளைகள்கு- லுங்கவுந்தளதளென-எழிற்காட்டியபணிதி
காதோலைகள்மினிர-வேல்போல்விழிபுரள-மாலாகியமனது-சந்தோஷமீறி
நவமணிபும்புனைமோகன-மாலை-யூச-லாட-வூசலு
விருதனமும்குதிபோடவில்-மார-னேடி-யோவெ-லோமென
இங்கிதந்தொடையசைய- வுங்கலந்திடையொசிய-முகத்தாற்றரளமென
மேல்வேர்வைகளகல-நீள்வார்குழல்களிரு-பாலேகவரியிட-அன்பாகமேவு
விபரிதமுந்தமுதூறல்சி-லீர்சி-லீர்கு-மீர்கு-மீரென
இருவர்களும்சமம்பாகசை-யோக-மாம்வை-போக-மாகிய
விந்தைவிந்தையிதுவெகு-சம்பிரமம்சிறுமனையில்-மணிச்சுட்டிமுடிமயிர்
சாடினவுசித்-கோலாகலபுதுமை-ஓகோகனசுரத-சிங்காரலீலை
இன்பமிக்கஇரதியினைநாடுமே.

கொச்சகக்கலிப்பா.

தன்மைசேர்கங்கா தரநாதர்மால்வளையிற்...................... *
கன்னிதனைக்கூடிக் கலந்தசுகாஞ்சிதந்தான் ...................... *
பின்னிலுருவும்அந்த வேளுருவுங்காலுருவும் ................. *
இன்னதெனச்சொன்னாலும் எஞ்சுகஞ்சொல்லொண்ணுதே...(௬)

---

புரசை

## ஆதியப்பமுதலியார்பேரில்

## சீட்டுக்கவிதை.

அதிமதுரமிருதுவசன சுபலலிதரசபாக வழுதப்பிரசங்கசிங்
கம், ஆசுமதுரஞ்சித்திர விஸ்தாரகவிதனி லடங்காதுபொழியும்மேக
ம், அழகுற்றகல்விக் களஞ்சியம்வெண்சலசை பயிராமிசிம்ஹாச
னம், அணிதொண்டைமண்டலங் கூவநகராதிபதி யாண்குருநாத
ன்மைந்தன், புதுமைபெறுசதுரங்க மிக்கசூதாடலும் புலியாடல்
கண்டபத்திரி, பகலாதியந்தமுட னெண்கவிதையெழுதவும் பற
மெறியுநெற்கலெல்லணப், பொற்புறுகதித்தகிரி வடிவேலர்தம்அரு
ட் பொழியும்அஷ்டாவதான, பொக்கிஷமெனுஞ்சாமி நாதகவி
ராசன் புகழ்ந்திடவிடுக்குமோலை,மதியணிபுமரனுக்கு முளைவாரிய
முதிட்டு வளர்சூலிமுதுகிலன்னம், வாணர்க்களித்தரவின் வாயினி
ற்கையிட்டு மணிவாங்கியேகொடுத்த,மகிபதிகிரீடபதி தொண்டை
மண்டலபதி மகாபதிதராபதியென,வருபுரசைபாகைநக ராதியப்
பேந்திர வமோதயன்மகிழ்ந்துகாண்க, சதுமறைவிளங்குபுவி மீது
நின்சீர்ப்புகழ் தழைத்தெழுந்தெண்டிசையெலாந், தான்படர்ந்
தெங்கும் பிரகாசித்ததாலுசித தண்டமிழ்ச்சொலிவிடுத்தேன், தன்
னிநந்தன்னையே காக்குமென்கின்றமொழி தவறாதநிலைமைகொ
ண்டேன், தனதுசமுகத்திலவ தானமும்பார்த்திடத் தயவுசெய்தி
டல்வேண்டுமே.........................................*

---

## நேமம்கிராமத்தார்பேரில்

## சீட்டுக்கவிதை.

மங்கலம்சொல்லெழுத் துத்தானமுண்டிபால்,வருணநாற்க
திகணமென,வகுத்திடுபொருத்தமுஞ் சொற்சுவையடர்ந்திட வழு
த்தும்பிரசண்டவாக்கி, மலர்வாணிநடிகொண்ட சிங்ஹாசனங்கல்
வி நவைக்கின்றபொக்கிஷமதாய், மங்குற்கதித்தகிரி வடிவேலர்பொ
ற்கமல மலரடியைமறவாதவன், இங்கிதமிருந்தசது ரங்கமுஞ்சூதா
ட லியல்கண்டபத்திரிதன்டல், இனியபுலியாடல்முது கினிலெறி
யுநெற்சல்பரி யெட்டெட்டுவிடுபாய்தல், எட்டெழுத்தாணிக் கி
சைந்ததமிழ்பகர்தலுட னிவ்வளவுநிறைமறவினில், இலைசோட்

சவதான சாமிநாதக்கவிஞ னினிமைகொண்டெழுதுமோலை, வெங்கயமுகன்காத்த விக்கினேசன்மாரி யின்காளிசெல்வியம்மை, வித்தைபெறுகலியாண வீராகவராருள் மிகுங்கனகவல்லியம்மை, விமலராவுணியீசர் சமயநாயகியும் விளங்கிவளர்நேமநகர்வாழ், வேளாளர்குவளைபுனை காராளர்தங்களிட விதரணயிகிழ்ந்துகாண்க, எங்கெங்குமுங்களது கீர்த்திப்பிரதாபமதி லங்கிடவிளங்குகின்ற, இயல்பினையறிந்துதய வதுமிகுந்தல்லலறு மினியதமிழ்தனைவிடுத்தேன், இன்பமொடுதங்கள்சமு கந்தனில்மகிழ்ந்துகொண் டென்றனவதானவித்தை, யேற்கையையறிந்துபுகழ் சேர்த்திடநினைந்துநல மிசைவரிசைதரல்வேண்டுமே.............................. *

## பேறூர்நாட்டுக்கிராமத்தார்பேரில்
## சீட்டுக்கவிதை

தென்கலைமடந்தைநட னங்கொள்நாடகசாலை செந்தமிழ்ப்பொழிபுமேகம், செய்யசதுரங்கமொடு சூதாடல்புலியாடல் ஜெயகண்டபத்திரிதண்டல், தெளிவாதியந்தமுட னெட்டெழுத்தாணிகவி சேர்ந்தெழுதஓதும்வலவன், சீர்க்கூவநகரதின் அஷ்டாவதானமுறை செய்சாமிநாதனோலை, பொன்கருணைமேவிவளர் கங்காகுலாதிபர்கள் புகழ்மேழிக்கதனத்தார், புனைகுவளைமாலிகா பரணருதாத்தையும் பொற்புறப்பிறியுண்ட, புதியவமுதக்கூழை யுங்காட்டுவித்தவோர் புலவனையந்திர்த்தவர், பூமியுயர்நாடான பேறைநகர்வேளாளர் புந்தியுண்மகிழ்ந்துகாண்க, முன்கையிற்சந்தன முனாத்ததும்பரனுக்கு மூளைவாரியமுதிட்டதும், முத்தமிழ்க்கரவின்மணியீந்ததும்குலிதன் மூதுகிலமுதைத்தந்ததும், மும்மண்டலந்தனினு மிம்மண்டலஞ்சீர்த்தி முதிர்தொண்டை மண்டலமென, முன்னமேயிப்படிதொ ணூற்றுறகீர்த்திபுகழ் மொழிமுதன்மைகண்டுற்றதா, லன்குபெறுதன்னினந் தன்னையேகாக்குமென நானிலஞ்சொல்வதாலே, நாடினேன்தங்களூர் தேடியேவாழ்வுற்ற ராமநாதப்பரமர்மேல், நயமானபஞ்சரத் தினமாலையோதிவந் தனமாகையாலனைவரும், நமதுடையவித்தையார்த் தநிகபரிசுகள்தந்து நல்லபாயனுப்பிடவுமே .............................. *

௧0 - எழுத்து வெண்பா.

உஜகவஅளஸ்த சரி.